
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40 கதிர் : 98 | செவ்வாய்க்கிழமை 04 மார்ச் 2025 | மாசி 20 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056

**ஜனவரியில் சுற்றுலாவிகளால் 400 மில்லியன் டொலர்!** ☞11



## உள்ளூராட்சித் தேர்தல்

# மார்ச் 17ஆம் திகதி வேட்புமனு ஏற்பு

தேர்தல் திகதி எப்போது என 20ஆம் திகதியன்று அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

**உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.** ☞11

## முதலமைச்சர் வேட்பாளராக ஒருபோதும் போட்டியிடேன்!

*சிறீதரன் எம்.பி. வெளிப்படை*



யாழ்ப்பாணம், மார்ச் 4

வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் எண்ணம் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் இழுபறியான நிலை காணப்படுகின் ☞11

## ஏப்ரல் மாதத்துக்குள் உள்ளாட்சித் தேர்தல்

*பிரதி அமைச்சர் ருவான் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 4

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் நடத்தப்படும் என்று மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதி அமைச்சர் ருவான் செனரத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான கட்டுப்பணம் ஏற்கும் நடவடிக்கைகளும், வேட்புமனு ஏற்புத் தொடர்பான நடைமுறைகளும் ஆரம்பமாகியுள்ள ☞11



## 4,255 கடலட்டைகளுடன் 17 பேர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 4

அனுமதிப் பத்திரம் இல்லாமல், சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளைப் பிடித்த 17 பேர் மண்டைதீவுக் கடற் ☞11

## காங்கேசன் வந்த படகு நடுக்கடலில் தத்தளிப்பு

*உடனடியாகக் கரைதிரும்பியது!*

சென்னை, மார்ச் 4

தமிழகத்தின் நாகப்பட்டினத்திலிருந்து இலங்கைக்குப் புறப்பட்ட பயணிகள் படகு, கடற்கொந்தளிப்புக் காரணமாக மீண்டும் நாகப்பட்டினத்துக்கே திரும்பியுள்ளது. 17 ஊழியர்கள் உட்பட 95 பேருடன் ☞11

## தமிழரசு இறங்கிவந்தால் கூட்டணி பற்றி பேசலாம்!

**சீ.வீ.கே.யின் கடிதத்துக்கு சித்தார்த்தன் பதில்**

யாழ்ப்பாணம், மார்ச் 4

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக நடைமுறைச் சாத்தியமான வகையில் எமது கூட்டணியுடன் பேச்சுகளை நடத்தக்கூடிய தீர்மானம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேற்கொண்டு அறியத்தருவீர்க ☞11



“தேர்தல் திருவிழா தொடங்கிட்டுதெல்லோ இனி ஒவ்வொரு வட்டாரத்திலையும் புதிசு புதிசா சமூகசேவகர்மார் உருவாகப்போயினம் கண்டியளோ”

## படையினர் மீது ஜனாதிபதி தாக்கு

*விமல் வீரவன்ஸ தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 4

போரின்போது இலங்கைப் படையினர் போர்க்குற்றம் இழைத்தனர் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு உயிர்கொடுக்கும் வகையிலும், படையினரைத் தாக்கும் வகையிலும் ஜனாதிபதி அநுர ☞11

## உழவியந்திரத்தில் சிக்கி 11 வயதுச் சிறுவன் பலி!

*உடுவிலில் நேற்றுப் பரிதாபம்*

யாழ்ப்பாணம், மார்ச் 4

உழவு இயந்திரத்தினுள் சிக்குண்டு சிறுவனொருவன் உயிரிழந்துள்ளான். உடுவில் கற்பமுனைப் பகுதியைச் சேர்ந்த நிகால்தாசன் ஆத்வீகன் (வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவனாவான்.

சிறுவன் உழவியந்திரத்தின் பின்னால் உள் ☞11

## உணவகத்தின் மீது வவுனியாவில் தாக்கு!

ஒருவர் கைது

வவுனியா, மார்ச் 4

வவுனியா நகரப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் மீது நேற்று இரவு தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், சந்தேகநபராக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலர் குழுவாகச் சென்ற ☞11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.03.2025 செவ்வாய்க்கிழமை

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 03.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4006 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 35 51 68 76 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 03.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1073 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 25 33 35 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 02.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 032 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 8 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 03.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2112 |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 07 14 16 22 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 03.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5764 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 9 3 8 8 2 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 03.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1794 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 02 41 75 81 |
| விசேட எழுத்து | A |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 03.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 339 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 8 8 2 9 |

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு; பணிக்குழுக் கூட்டம் விரைவில்

## அண்ணாமலை தகவல்

**சென்னை,மார்ச் 4**

**இருநாட்டு மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா - இலங்கைக் கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் விரைவில் நடைபெறும் என பாரதிய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.**

இராமநாதபுரத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற நிகழ்ச்சி யொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மீனவர் பிரச்சினையை சட்ட ஒழுங்காகவோ, எல்லைப் பிரச்சினையாகவோ அணுகாமல் மனிதாபிமானப் பிரச்சினையாக அணுகவேண்டும் என்றே இந்திய அரசு, இலங்கை அரசிடம் வலியுறுத்திவருகிறது. இந்த நிலையில், மீனவர் பிரச்சினை தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்குக் கடிதமொன்றை எழுதினோம். குறித்த கடிதத்திற்குப் பதிலளித்த அவர் இந்தியா - இலங்கை கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் விரைவில் நடைபெறும் எனக் குறிப்பிட்டுள்ளார் என்றார். (அ-33)



## சிறுபோகத்துக்காக இரணைமடு திறப்பு

கிளிநொச்சி, மார்ச்.4

2025 ஆம் ஆண்டு சிறுபோகச் செய்கைக்காக இரணைமடுக்குளத்தின் நீர், சமய வழிபாட்டுடன் சம்பிரதாயபூர்வமாக நேற்றுத் திங்கட்கிழமை திறந்துவிடப்பட்டது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர், நீர்ப்பாசனப் பொறியியலாளர், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். பயிர்ச் செய்கைக்குழுவின் தீர்மானத்தின்படி 2025 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் 19 ஆயிரத்து 164 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் 382 ஏக்கர் நிலப் பரப்பில் சிறுதானியச் செய்கையும் மேற்கொள்ளப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-25,113)

## எரிபொருள் விநியோகத்தை முடக்குவதற்கு சதித்திட்டம்?

### விசாரணைகளை ஆரம்பித்தது குற்றப்புலனாய்வுத் திணைக்களம்

கொழும்பு, மார்ச் 4

எரிபொருள் விநியோகத்தை முடக்கும் சதி தொடர்பில் கிடைத்த முறைப்பாடு தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருள் விநியோகஸ்தர்கள் என்று கூறும் சில நபர்கள் இதன் பின்னணியில் உள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள பொலிஸ் ஊடகப் பிரிவு, மக்களைப் பதற்ற நிலையில் வைத்திருக்க முயற்சிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. (எ-இ)

## கீரைக்கு பாதிப்பு

கடந்தசில நாள்களுக்கு முன்னர் பெய்த மழையினால் வலி . கிழக்கில் கீரைச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. தாழ்ந்த நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட கீரைச்செய்கையே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. (அ-2-17)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 03.03.2025 | திங்கட்கிழமை | 0472 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| P | 2 1 3 9 6 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 03.03.2025 | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2738 | L | 03 18 26 25 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 03.03.2025 | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 31 35 56 66 | 4899 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 03.03.2025 | திங்கட்கிழமை |
| மேஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 05 15 31 45 | 4450 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| | | திகதி | தினம் |
| | | 03.03.2025 | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 25 | 28 30 38 42 | 1914 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 03.03.2025 | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| D | 22 36 57 75 | 2564 |

| JAYODA DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 03.03.2025 | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 04 15 37 54 | 2108 |



## கேரளக் கஞ்சா; மன்னாரில் மீட்பு

மன்னார், மார்ச். 4

மன்னார் சிலாவத்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாசீம் சிற்றிப் பகுதியில் ஒரு தொகுதி கேரளக்கஞ்சாப் பொதிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மீட்கப்பட்டுள்ள தோடு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் சவரிபுரம், சிலாவத்துறைப் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவராவார். மீட்கப்பட்ட கேரளக் கஞ்சா 31 கிலோ 62 கிராம் எடை கொண்டது என மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப்பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணையின்பின் சந்தேக நபர் மற்றும் வழக்குப் பொருள்களுடன் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர். (அ-25,56)

## மண்சரிவு அபாயம்!

கொழும்பு, மார்ச்.4

மழையுடனான வானிலை காரணமாக பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. பதுளை மாவட்டத்திலுள்ள ஹாலிஎல, பசறை, கந்தகெட்டிய, பதுளை, ஹப்புத்தளை, மீகஹகிவுல, ஊவாபரணகம மற்றும் சொர்ணா தொட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலகப் பகுதிக்குமே மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது. (அ-41)

## போதிய எரிபொருளை கையிருப்பாக பேணுக!

சகல எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் போதியளவு எரி பொருள் கையிருப்பை பின்பற்றுமாறும், எரிபொருள் முடிவதற்கு முன்பே அதற்காக விண்ணப்பித்து எரிபொருளைப் பெற்றுக் கொள்ளுமாறும் இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. 'எரிபொருள் சேமிப்புத்தாங்கியின் அளவுப்பிரமாணத் துக்கு ஏற்ப எரிபொருள் தீரும் முன்பே அதனைப் பெற்றுக்கொள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை சீராக மேற்கொள்ளும் வகையிலும், கையிருப்புத் தீராத வகையிலும் எரிபொருளை போதியளவு சேமிக்கவேண்டும்' எனவும் பெற்றொலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (அ-25,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்குத் தலைக்கவசம் அணிவிக்காவிடின் நடவடிக்கை



யாழ்ப்பாணம், மார்ச். 4

**தலைக்கவசங்களை அணிவிக்காது தமது பிள்ளைகளை மோட்டார் வாகனத்தில் ஏற்றிச்செல்லும் பெற்றோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.**

ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்திலுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தலைக்கவசம் அணிவிக்காமையால் விபத்துக்கள் சம்பவிக்கின்றன. அது சிறுவர்கள் மத்தியில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு பிள்ளைகளை தலைக்கவசமின்றி மோட்டார்வாகனங்களில் ஏற்றிச்செல்லும் பெற்றோரின் சாரதி அனுமதிப் பத்திரங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்படுகின்றன. பெற்றோர் தமது பிள்ளைகளுக்குரிய தலைக்கவசங்களைக் கொண்டு வந்து பொலிஸாரிடம் காட்டிய பிறகே அனுமதிப் பத்திரங்கள் திருப்பிக்கொடுக்கப்படுகின்றன. மேலும் தலைக்கவசமின்றிப் பயணிப்பதால் பிள்ளைகளுக்கு ஏற்படும் ஆபத்தான வீதி விபத்துக்கள் தொடர்பான காணொலி வகுப்புகளை பொலிஸ் நிலையங்களில் நடத்துகின்றோம் என்றார். (அ-25-125)



# 'வெள்ளியில் ஞாயிறு' நாடகப்பிரதி வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச். 4

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதி வழங்கும்வைபவம், இல.17, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலை ஞான சுரபி' தியான இல்லத்தில் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப. யோ. ஜெபரட்ணம் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார். இந்தவருடம் திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான மூன்று நாள்களுக்கு வெள்ளியில் ஞாயிறு' எனும் பெயரில் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மாலை 6.45 மணிக்கு மேடையேற்றப்படவுள்ளது. பிரதிவழங்கும் வைபவத்தில் வழமையாகத் திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்துகொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக்கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (அ-25)

# கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகள்

எச்சரிக்கிறார் ஆனந்த விஜயபால

கொழும்பு, மார்ச் 4

கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமியத் தீவிரவாதச் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் கவனம்செலுத்திவருவதாக பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் கல்முனைப் பிரதேசத்தில் முஸ்லிம் சிறுவர்களுக்கு வழிபாட்டுத்தலங்களில் வைத்து தீவிரவாதக் கருத்துக்கள் போதிக்கப்பட்டுவருவதாக அரச புலனாய்வு அறிக்கைகளும் இராணுவப் புலனாய்வு அறிக்கைகளும் தெரிவித்துள்ளன. அரசாங்கம் எக்காரணம் கொண்டும் தீவிரவாதத்தையும் மதவாதத்தையும் அனுமதிக்கமாட்டாது. இனவாத, மதவாதக் கருத்துக்களை முளையிலேயே கிள்ளி எறிவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுவருகிறோம் - என்றார். (அ-33-6)



# கஞ்சாவை பயிரிட்ட மூவர் கைது

கொழும்பு, மார்ச் 4

யால வனப்பகுதியில் 2 லட்சத்து 40 ஆயிரத்து 700 கஞ்சாச் செடிகளை வளர்த்த குற்றச்சாட்டில் மூவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தல விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இந்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

# இந்தியாவில் செவ்வந்தி?



கொழும்பு, மார்ச் 4

புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்குள் கணேமுல்ல சஞ்சீவவைக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், திட்டமிடலின் பிரதான சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் இஷாரா செவ்வந்தி என்ற பெண் கடல்வழியாக இந்தியா தப்பிச் சென்றிருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இஷாரா செவ்வந்தி நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான அனைத்துத் வழிகளும் முடக்கப்பட்டிருந்தாலும், அவர் படகு மூலம் இந்தியாவுக்கு தப்பிச் செல்வதற்கான சாத்தியக்கூறுகளைக் கருத்திற் கொண்டு, இலங்கைப் பொலிஸார் சந்தேக நபர் தொடர்பிலான அனைத்துத் தகவல்களையும் இந்தியப் பாதுகாப்புப் படையினருக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-எ-இ)




'இழவெடுத்த ஸ்ட்ரைக்குகளால இலவு காத்த கிளியள் மாதிரி ஏமாந்து ஆத்தலைய வேண்டிக்கிடக்குது'எண்டு ஒருத்தர் பட்சியிட்ட அழுது புலம்புனபடி சொன்னார். அவருக்கு ஒண்டரை வருசத்துக்கு முதல் கேணியா வருத்தம் வந்திட்டுது. அதுக்கு ஒப்பிரேசன் செய்துதான் மாத்தோணும். ஆனால் அவரை மாதிரிக் கனபேருக்கு ஒப்பிரேசன் செய்ய வேண்டி இருந்ததால், பதிஞ்ச ஒழுங்கின்படிதான் டாக்குத்தர்மார் பெரியாஸ்பத்திரியில ஒப்பிரேசன் செய்வினம். அப்பிடி அவர் பதிஞ்சு ஒண்டரை வருசத்துக்குப் பிறகு, போனகிழமைதான் ஒப்பிரேசன் செய்யிறதெண்டு டேட் குடுத்தவை. அவரும் ஒண்டரை வருசமா அந்தக் கேணியாவோட பட்டபாட்டுக்கெல்லாம், இந்த ஒப்பிரேசனோட விடிவு வருமெண்டு நம்பிக்கொண்டிருந்தார். ஆனால் அவருக்கு ஒப்பிரேசன் செய்யிற அண்டைக்கு ஸ்ட்ரைக் நடக்கிறதால, அவருக்குக் குடுத்த நாளில ஒப்பிரேசன் நடக்காது எண்டு ஆஸ்பத்திரியில இருந்து அறிவிச்சிருக்கினம். அவ்வளவுதான். இடிவிழுந்தால் கூட கலங்காதவர் இப்பிடி ஒப்பிரேசன் இல்லையாம் எண்டதைக் கேட்டதும் சல்லி சல்லியா நொருங்கிப் போட்டார்.

நடக்காது எண்டு சொன்னவை இனி எப்ப எனக்கு ஒப்பிரேசன் எண்டும் சொல்லேலை. அப்பிடியெண்டால் இனி திரும்ப 'புக்' பண்ணி இன்னொரு ஒண்டரை வருசம் நான் வெய்ட் பண்ணோனுமோ? இல்லாட்டி இடையில செய்வினமோ? எண்டு ஒண்டும் தெரியாமல் கிடக்கு. இந்த ஒண்டரை வருசமும் இந்தக் 'கேணியா' உள்ளுக்குள்ள வெடிச்சிடுமோ எண்ட பயத்திலதான் இருந்தன். இனியும் அந்தப்பயத்தோட எவ்வளவுநாள் தாக்காட்டப்போறனோ? இனியும் விட்டால் இதால உயிருக்கு ஆபத்து. அதால இனி பிரைவேட்டாத்தான் செய்யோணும். ஆனால் அதுக்கு எங்களிட்ட வசதி இல்லை எண்டு அவர் சொல்லி அழுதார். அவரை மாதிரி இந்தமுறை ஸ்ட்ரைக்கால யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில மட்டும் 12 பேருக்கு ஒப்பிரேசன் நிப்பாட்டுப்பட்டதாம். என்னதான் ஸ்ட்ரைக் எண்டாலும் இப்பிடி வருசக்கணக்குக்கு முதலே நாள் குறிச்ச ஒப்பிரேசன்களை செய்யிறதுதானே நியாயம்? அப்பிடி ஒப்பிரேசன்களைச் செய்தால் ஸ்ட்ரைக்குக்கு ஒரு பாதிப்பும் வரப்போறேலையே. அதைவிடக் கொடுமை என்னெண்டால் இந்த ஸ்ட்ரைக்கை வைக்கேணுமெண்டதில முன்னுக்கு நிண்ட சில டாக்குத்தர்மார் அண்டைக்கு முழுக்க பிரைவேட் ஆஸ்பத்திரியளில வேலைக்குப் போட்டினமாம். ஸ்ட்ரைக் நாளில பிரைவேட்டில அவையள் வேலை செய்யலாம் எண்டால், பெரியாஸ்பத்திரியில இப்பிடி ஒப்பிரேசன்களையும் செய்திருக்கலாமே. இப்போதைக்கு ஒப்பிரேசன் நடக்காது எண்டதால அவையளை பிரைவேட்டா செய்யச் சொல்லியும் உந்த டாக்குத்தர்மார் சொல்லியிருக்கினம் எண்டும் கதை.

இன்னும் ஒண்டும் கெட்டுப்போகேலை. இப்பிடி ஸ்ட்ரைக் காலத்தில ஒப்பிரேசன் நடக்காமல் விட்ட வருத்தக்காரருக்கு, இன்னொரு திகதியை வேளைக்கே குடுத்து, அந்த ஓர்டரில அவைக்குப் பின்னுக்கு இருக்கிறவைக்கும் ஒப்பிரேசன் செய்தா கொஞ்சமெண்டாலும் ஆறுதலா இருக்கும். இல்லாட்டி திரும்பப் பதிஞ்சு இன்னும் ஒண்டரை வருசம் காத்திருக்கோணுமோ எண்டெல்லோ அவை ஏங்கிக்கொண்டிருப்பினம். இனி எப்ப ஒப்பிரேசன் எண்டு ஆஸ்பத்திரிக்காரர் அவைக்கு தெளிவா அறிவிச்சால் குழப்பம் இல்லாமல் இருப்பினம். அதை ஆஸ்பத்திரிக்காரர் செய்வினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறு பாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்னை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்:** உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் சில பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுடன் அதிகப்படியான செலவுகளும் ஏற்படும்.

**கன்னி:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**துலாம்:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** : நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள். பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** தாய்வழி உறவினர்களுக்காக செலவு செய்யநேரிடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**கும்பம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:** பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.



## ‘வேர்களும் தடங்களும்’ ஓவியக் கண்காட்சி

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் மாணவர் அமைப்பாகிய கலை வட்டத்தின் ஒழுங்குபடுத்தலில் “வேர்களும் தடங்களும்: புலப்பெயர்வூடும் ஞாபகத்தினூடும் ஓர் பயணம்” எனும் ஓவியக்காட்சி, நுண்கலைத்துறைக் கலைக்கூடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்தக்காட்சியில் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து தென் அயர்லாந்தில் வசித்துவரும் காண்பியக் கலைஞரான அனுசியா சுந்தரலிங்கத்தின் புலப்பெயர்வு அனுபவம் மற்றும் ஞாபகங்களை வெளிப்படுத்தும் படைப்புகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வைக்காகக் கலைக்கூடம் திறந்திருக்கும். . நிகழ்வின் தொடராக கலைக்கூடக் கருத்தரங்கு மண்டபத்தில் நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு கலைஞரின் உரையும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-25-66)

## யாழ்தேவியில் மோதி ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரயில் மார்க்கத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். இவர் அநுராதபுரம், ஸ்ராவஸ்திபுரம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவராவார். கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த யாழ்தேவி ரயிலில் மோதியே இவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் அநுராதபுரம் மருத்தவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-41)

## தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஏழிசை மாலை –32 நிகழ்வு

கொடிகாமம் மார்ச்.4

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஏழிசை மாலை-32 நிகழ்வு தென்மராட்சிக் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் தலைமையில் சாவகச்சேரி நகராட்சி பொன்விழா மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய சங்கீத பாட ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி ஈழநேசன், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ-41-159)





மறைந்த மாவை சேனாதிராஜாவின் 31 ஆம் நாள் நினைவை முன்னிட்டு, இரத்த உறவுகளின் பங்களிப்புடன் மட்டக்களப்பில் அண்மையில் இரத்ததானமுகாம் நடைபெற்றது. (அ-25)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூன்றாவது சர்வதேச இந்துமாநாடு

யாழ்ப்பாணம், மார்ச்.4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடம் ‘இந்துக்கலைகள் ஒரு பன்முகப்பார்வை’ எனும் தொனிப்பொருளில் நடத்தும் மூன்றாவது சர்வதேச இந்து மாநாடு - 2025 எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் தலைமையில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

மாநாட்டின் முதலாம்நாள் நிகழ்வு 6ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணியளவில் ஆரம்பமாகவுள்ளது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். சி.சிறிசற்குணராஜா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் ஆய்வடங்கல் வெளியீடு, விருது வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் அன்றையதினம் பிற்பகல் ஒரு மணியளவில் ஆய்வரங்க அமர்வுகள் ஆரம்பமாகி இடம்பெறும்.

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு மறுநாள் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் நடைபெறும். நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை வருகை விரிவுரையாளர் பொன்.ஸ்ரீவாமதேவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கலைஞர் கௌரவிப்புடன் இசையரங்கு, நாட்டாரிசை போன்ற பல்வேறு கலைநிகழ்வுகளும் நடைபெறுமென நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-41-66-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

பயிற்சி மட்டுமே மனதின் சக்திகளையும், உடலின் சக்திகளையும் அவற்றின் பரிபூரண நிலைக்கு கொண்டுவருகிறது.

–ஜான் லாக்–


## பச்சை மரத்துக்கே இந்நிலை நேரின்...!

'இராணுவத்தினர் ஒரு மலைப்பகுதியைக்கூட மிச்சம் விடாமல் ஆக்கிரமிக்கின்றனர். எந்தவொரு மலைப்பகுதியிலும் விவசாயத்துக்காக ஒருதுண்டு இடமில்லை. தயவுசெய்து எமது பகுதிகளில் படைமுகாம்களை அமைக்கவேண்டாம்' இப்படி ஒரு கோரிக்கையை அரசாங்கத்திடம் விடுத்திருப்பது தமிழ்மக்களோ, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரோ அல்லர். மாறாக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சாமர சம்பத் தஸநாயக்கவே இவ்வாறு ஒரு கோரிக்கையினை நாடாளுமன்றில் முன்வைத்துள்ளார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின், 2025ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின், பாது காப் புத்துறை தொடர்பான ஒதுக்கீட்டில் உரையாற் றும்போதே, சிங்களப் பகுதிகள் மீதான இராணுவ ஆக்கிரமிப்புத் தொடர்பில் பட்டவர்த்தனப்படுத்தியிருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க.

கத்தோலிக்கர்களின் புனிதநூலான வேதாகமத்தில் இயேசுக் கிறிஸ்து தெரிவித்ததாக ஒரு வசனம் உள்ளது. 'பச்சை மரத்துக்கே இந்தநிலை நேர்ந்தால், பட்ட மரங்கள் என்னவாகும்?' என்ப தாக அமைந்துள்ளது அந்த வசனம். அதாவது, இறை மகனான தனக்கே இத்தனை துன்பங்கள் வழங் கப்படுகின்றன என்றால், சாதாரண மக்களின் நிலை தான் என்ன? என்ற கருப்பொருளைத்தான் அந்த வசனம் கட்டியம் செய்கின்றது. இந்த இறை வார்த்தைகள் இன்று இலங்கைத் தீவுக்கும் கச்சிதப் பொருத்தம். தன் இனத்தைச் சேர்ந்த, தன் மொழி யைப் பேசுகின்ற சிங்களமக்களின்வாழ்வாதாரமும், பொருளாதாரமும் இன்று ஸ்ரீ லங்கா இராணுவத்தால் வகைவகையாக வேட்டை யாடப்படுகின்றன என் றால், தமிழர் பகுதிகளின் நிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்று சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

விவசாய பூமியான வலிகாமம் வடக்கில் பலநூறு ஏக்கர்கள் நிலப்பகுதி இன்னமும் இராணுவத்தின் பிடியில்தான் உள்ளது. தென்னைகள், மா, பலா என எம்மூதாதையர் பயிரிட்ட வளங்களின் அறுவடைகள் இன்று 'இராணுவத் திறைசேரியை' நிரப்பிக் கொண்டிருக்கின்றன. மண்வளம், தண்ணீர்வளம், சந்தை வாய்ப்பு என அனைத்தும் சீருடையினரால் அனுபவிக்கப்பட்டுக்கொண்டிருக் கின்றன. இராணுவத்தினரால் நடத்தப்படும் ஹோட்டல்கள் மற்றும் கடைகளுக்கும் தமிழர் தாயகத்தில் பஞ்சமில்லை. இப்போது ஆகப்பிந்தியதாக, இராணுவத்தினரால் அழககங்களும்கூட நடத்தப்பட்டு வருகின்றன. மலைப்பகுதிகளில் செய்யப்பட்ட (பொதுநிலம்) விவசாயத்தை இராணுவம் ஆக்கிரமித்துவிட்டது என்பதற்கே இத்தனை பதைபதைப்பு என்றால், வாழ்விழந்து, வளமிழந்து, மண்ணிழந்து, மரபிழந்து நிற்கும் தமிழர்களின் பதைபதைப்பையும் உள்ளக் கொதிப் பையும் புரிந்துகொள்வதொன்றும் அவ்வளவு கடினமான காரியமல்ல.

இங்கே விடயம், சிங்கள பகுதிகள், தமிழர் பகுதிகள் என்பதல்ல. ஆக்கிரமிப்பு என்னமோ ஒன்று தான். பொதுமக்களின் அன்றாட வாழ்வாதாரத்திலும், பொருளாதாரத்திலும் ஏற்படுத்தப்படும் இராணுவத் தலையீடுகள் எதுவாக இருந்தாலும் அது கண்டிக் கப்பட வேண்டியதே. ஆதலால், நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்கவின் கருத்தை 'தமிழர் தேசத்துக்கான' ஒரு சாட்சியமாகக் கருதிச் செயற்பட வேண்டிய தார்மீகப் பொறுப்பு அரசாங் கத்துக்கு இருக்கின்றது. அதற்குரிய ஒத்துழைப்பை கட்சிபேதம் இல்லாமல் வழங்க வேண்டிய கடமை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமானது.




காற்றாலை மின்னுற்பத்தித் திட்டம்

## அதானியின் நிறுவனத்தை வெளியேற்றியமை தவறு!

மனோ எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச. 4

**காற்றாலை ஒப்பந்தத் திட்டத்தில் இருந்து, அதானி நிறுவனத்தை வெளியேற்றியமை பெரும் தவறு என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இந்தியாவைத் தாண்டிய வகையில் இலங்கைக்குள் எந்த அபிவிருத்தியும் வராது. இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் வரவேண்டுமென்றால், அதற்கு இந்தியா மீதான நம்பகத்தன்மையும் ஒரு காரணமாகவே அமையும். இவ்வாறான நிலையில், அதானி நிறுவனத்தை காற்றாலை மின்திட்ட ஒப்பந்தத்தில் இருந்து வெளியேற்றியமை தவறு என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

'அதானியை நீங்கள் வெளியேற்றவில்லை. அதானியின் நிறுவனம் தான் உங்களைவிட்டு வெளியேறி விட்டது. இது இலங்கைக்கு சர்வதேச முதலீட்டாளர்கள் வருவதற்கான வாய்ப்புகளைக் குறைத்துள்ளது. அதானி நிறுவனத்தை இலங்கை அரசாங்கம் கூடுதலான பொறுப்புணர்வுடன் கையாண்டிருக்க வேண்டும்'- என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளார். (அ-ம)

## பொலிஸ் வீட்டில் வெடிபொருள்கள்!

கொழும்பு, மார்ச் 4

அநுராதபுரம் கலென்பிந்துனுவெவப் பிரதேசத்தில் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டுவளாகத்திலிருந்து 341தோட்டாக்கள் மற்றும் 4 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

ரி-56 ரக துப்பாக்கிக்கான 281 தோட்டாக்கள், 5 மகசின்கள் மற்றும் 84 எஸ் துப்பாக்கிக்கான 6 தோட்டாக்கள் 4 கைக்குண்டுகள், உட்பட பெருமளவான வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-இ)



## 334 மில்லியன் டொலர் ஐ.எம்.எப். வழங்கும்!

தொழில் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 4

சர்வதேச நாணயநிதியத்தின் நான்காவது தவணையாக இலங்கைக்கு 334 மில்லியன் டொலர் நிதி கிடைக்கும் என தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் கடந்த சனிக்கிழமை நடத்திய விசேட ஊடக சந்திப்பில் இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடன் விரிவாக்கல் வசதியின் கீழ் இலங்கைக்காக மேலும் ஒரு தவணையை அங்கீகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை தீர்மானித்துள்ளது. 344 மில்லியன் அமெரிக்க டொலரை கடன் தவணைக்காக அனுமதித்துள்ளது-என்றார். (எ-இ)

## மின்னலால் ஒருவர் சாவு

மின்னல் தாக்கத்தால் ஒருவர் உயிரிழந்துள்ளாரெனவும், சீரற்ற வானிலை காரணமாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் 178 குடும்பங்களைச் சேர்ந்த 726 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று தெரிவித்துள்ளது. (அ-இ)


## அனலைதீவுக் கடற்பரப்பில் 197 கிலோ கஞ்சா மீட்பு

எழுவைதீவு மற்றும் அனலைதீவுக்கு இடையே உள்ள கடற்பரப்பில் 197. 4 கிலோக்கிராம் கஞ்சா, நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டதாக இலங்கைக் கடற்படை ஊடகப் பேச்சாளர் உதயனுக்குத் தெரிவித்தார். கடற்படையின் விசேட ரோந்து நடவடிக்கைகளின் பொழுது, எழுவை தீவுக்கும் அனலைதீவுக்கும் இடையிலான கடற்பரப்பில் பயணித்த படகொன்றைச் சோதனையிட்டபோதே அதிலிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து இதனுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் காரைநகர் மற்றும் பேசாலை பகுதியினைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களையும் சான்றுப் பொருள்களையும் ஊர்காவற்துறைப் பொலிஸாரின் ஊடாக நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-25,125-66-26)

நாளை
புதன்கிழமை - மாசி - 21
05.03.2025
சுபநேரம் : 04.56 - 06.26
ராகுகாலம் : 12.26 - 01.56
கார்த்திகை விரதம்
சஷ்டி விரதம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தருமபுரம் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

## மக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

கரைச்சிப் பிரதேசசபையின் கீழுள்ள தருமபுரம் பொதுச்சந்தை அண்மைக்காலமாக உரிய முறையில் கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததனால் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்குகின்றது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சந்தைப் பகுதி தற்போது கால்நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது. அத்துடன் தற்போது பெய்துவரும் மழை காரணமாக கால்நடைகளின் எச்சங்கள், கழிவுகள் என்பவற்றால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் வியாபாரிகள், சந்தைக்கு வரும் நுகர்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். எனவே இந்தச் சந்தைப் பகுதியை உரியமுறையில் பேணுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-41-113)

## கசூரினாக் கடற்கரையிலுள்ள

# முகாமை அகற்றாமல் கடற்படை அழுங்குப்பிடி

யாழ்ப்பாணம், மார்ச் 4

**காரைநகர்ப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட சுற்றுலாத்தலமான கசூரினாக் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமை அகற்றுவதற்கு பதிலீட்டு நிலம் மற்றும் பணத்தொகை உட்பட கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டபோதிலும் கடற்படை குறித்த பகுதியைவிட்டு அகன்று செல்லாதுள்ளமை ஏன்? என்று காரைநகர்ப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் க.பாலச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**


அவர் மேலும் தெரிவிக்கையில்,

காரைநகர் கசூரினாக் கடற்கரையில் உள்ள கடற்படை முகாமை கசூரினா சுற்றுலாமையத்துக்குக் கிழக்குப் பக்கமாக நகர்த்துவதற்கு கடந்த 2022ஆம் ஆண்டு கடற்படை அதிகாரிகளின் பிரசன்னத்துடன் நடைபெற்ற பிரதேசசபையின் 54 ஆவது அமர்வில் முடிவெடுக்கப்பட்டது. கடற்படையினரின் முகாமுக்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிசபையின் மூலதன அபிவிருத்தி நிதியிலிருந்து சபையின் காலத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும் இதுவரையில் அங்கிருந்து கடற்படை முகாம் அகற்றப்படவில்லை.

எனவே, இதுதொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் கவனம்செலுத்தி உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

இதுதொடர்பில் காரைநகர்ப் பிரதேசசபையின் செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது, கடற்படைக்கு பதிலீட்டு நிலத்துடன் பாலம், வீதி என்பனவும் சீரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் சபையில் ஒதுக்கப்பட்ட நிதி அவ்வாறே உள்ளது. கடற்படை அகன்று செல்ல முனையும்போது நாம் அவர்களுக்குரிய தொகையை வழங்குவோம். எனினும் இதுவரையில் கசூரினாக் கடற்கரையிலிருந்து கடற்படை அகலுவதாகத் தெரியவில்லை- என்றார். (ச-125)



# கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 4

இணுவில் பொதுநூலக கனடா அமைப்புக் குழுவினரின் நிதிப்பங்களிப்பில் கட்டப்பட்ட இணுவில் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையப் புதிய பார்வையாளர் வரவேற்புக் கட்டடத் திறப்புவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.


இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி கெ.இந்திரமோகன், சிறப்பு விருந்தினராக இணுவில் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையப் பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தர் திருமதி கலாரதி நடராஜன், கௌரவ விருந்தினர்களாக இணுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி.சிவானுஜன், கனடாவைச் சேர்ந்த நன்கொடையாளர் திருமதி ஞானமணி திருநாவுக்கரசு ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25.66)

# பன்றித்தலைச்சி அம்மனில் பங்குனித் திங்கள் உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச்.4

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 17, 24, 31 ஆம் திகதிகளிலும் மற்றும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதியிலும் நடைபெறவுள்ளது.

பங்குனித்திங்கள் நாள்களில் அம்மனுக்குச் சிறப்புப் பூசைவழிபாடுகள் அதிகாலை 5மணிக்கு உஷாக் காலப் பூசையுடன் ஆரம்பமாகிக் காலை, மாலை அபிஷேகம், சிறப்புப் பூசைவழிபாடுகள், பொங்கல் படையல், அர்ச்சனை வழிபாடு என்பன இடம்பெற்று இரவு 9மணியளவில் அர்த்தசாமப் பூசையுடன் பங்குனித்திங்கள் பொங்கல் வழிபாடுகள் நிறைவுபெறும். அடியவர்கள் வழமைபோன்று புனித தீர்த்தக் கேணியில் நீராடி விரதமிருந்து பொங்கல், படையல், அர்ச்சனை உள்ளிட்ட நேர்த்திகள், வழிபாடுகளை நிறைவேற்றிக்கொள்ளலாமென ஆலயத் தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (ச-41-66)





# மனித உரிமைகள் ஆணைக்குழு நெடுந்தீவில் மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 4

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் கலந்துரையாடலொன்று கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் இடம்பெற்றது.

ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் தனராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், ஆணைக்குழுவின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் சட்டத்தரணி கபிலன் வில்லவராயன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ், ஆணைக்குழுவின் மனித உரிமை அலுவலர் குமுதினி சேவியர், நெடுந்தீவு பிரதேச செயலாளர் திருமதி நிவேதிகா, வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி கலாநிதி ஜெயக்குமார் மற்றும் தீவகக் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.தருமலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது நெடுந்தீவுப் பிரதேச மக்களின் உரிமைகள் சார்ந்த பிரச்சினைகள், கல்வி மற்றும் சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் நெடுந்தீவிலுள்ள பொது அமைப்புகளிடமும் பொதுமக்களிடத்திலும் கேட்டறிந்துகொண்டனர். (ச-25, 27)

# செம்பியன்பற்று வடக்கில் இரவோடிரவாகக் காடழிப்பு!

## அதிகாரிகள் அசமந்தம்

யாழ்ப்பாணம், மார்ச். 4

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்குப் பகுதிகளில் ஜே.சி.பி இயந்திரம் மூலம் இரவோடு இரவாக கடந்த வெள்ளிக்கிழமை பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியபோதிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் அதே பகுதியைச் சேர்ந்தநபரொருவராலேயே இந்தச் சட்டவிரோதச் செயல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தியிடம் கேட்டபோது, குறித்த நபர் குத்தகைக்குக் காணியைப் பெறுவதற்கு கடிதம் தந்துள்ளார். எனினும் காடுகளை அழிப்பதற்கு தாம் அனுமதி வழங்கவில்லை. இதுதொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச- 25,27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருதடி விநாயகருக்கு 22 இல் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மஹோற்சவத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை முன்னாயத்தக் கூட்டம் ஆலயத் தர்மகர்த்தா சபையினரால் மகோற்சவகால உபயகாரர்களுடன் முன்னெடுக்கப்பட்டது. (ச-41-125)

ஓம் சிவாய நம

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 01.09.1951 மறைவு 02.02.2025

கடந்த 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திய மன்னாரை பிறப்பிடமாகவும் அட்டம்பலவத்த வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் பிள்ளையான் நாகையா

(பிரசன்னா என்ரபிறைஸ் உரிமையாளர் வத்தளை)

**திதி: பூர்வபக்க பஞ்சமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (03.03.2025) திங்கட்கிழமை கொழும்பு - 15, முகத்துவாரம் கடலில் அஸ்தி கரைக்கும் நிகழ்வு நடைபெற்றது. இன்று (04.03.2025) செவ்வாய்க்கிழமை வத்தளை மாபோல நகர சபை மண்டபத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.52 /5/F, அட்டப்பலவத்த,
வத்தளை,
076 229 4664


வே. பிள்ளையான்
குடும்பத்தினர்
077 778 0859

(cs 57603) (N-1)

# ஆங்கில வகுப்பு

தரம் 4,5,6,7,8 கற்பிக்கப்படும்.
ஆரம்பம் : 05.03.2025
நேரம் : பி.ப 3.30 - 4.30
ஆசிரியர் : இ.கெனடி B.A, PGDE NCG Tech
விலாசம் : இல 65 குருசோர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 077 947 9828

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 12 . 04 . 1944 மறைவு 03 . 02 . 2025

கடந்த 03.02.2025 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் விநாயகமூர்த்தி ஆறுமுகம்

(வைத்தியர் - சமாதான நீதவான்)

**திதி: வளர்பிறை பஞ்சமி**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (03.03.2025) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வு நாளை (05.03.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

விடத்தற்பளை,
மிருசுவில்.

குடும்பத்தினர்
077 198 3585

(cr.44471) (N-1)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 4

யாழ். நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடர்-15 சொற்பொழிவு, சிவநெறிப்பிரகாசர் , சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.சைவப்புலவர் பொன். சந்திரவேல் தகரேறுபடலம் எனும் விடயப்பொரு ளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ-25)

★★★★★★

யாழ்ப்பாணம், மார்ச். 4

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. இளஞ்சைவப்புலவர் ச. நவநீதன் மாணிக்கவாசகரும் திருவெண்பாவையும் எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ-25)

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 01 . 1932 மறைவு 01 . 03 . 1925

## சின்னத்தம்பி குமாரசுவாமி

(ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர் மலேரியா தடுப்புப்பிரிவு)

யாழ். கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணம் சரவணை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குமாரசுவாமி அவர்கள் கடந்த 01.03.2025 சனிக்கிழமை காலமானர்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிவக்கொழுந்து தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் பாசமிகு கணவரும் தயானந்தன், சதானந்தன் குகநேசன் காலஞ்சென்றவர்களான சர்வானந்தன், சத்தியலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், முல்லை, சியாமளாதேவி, திலகதிவானி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தவநாயகம், சாந்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தஷ்யன், ஜயன், சஜன், சசிகாந், பங்கஜன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2025) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணியளவில் சின்னமடு மாதா கோயிலுக்கு அருகாமையில் சரவணை மேற்கு வேலணையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10.30 மணியுளவில் தகனத்திற்காக சரவணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 151 7552, 021 221 9130

(CS 57647) J-1

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை அரிச்சந்திரன்

நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை அரிச்சந்திரன் (சின்னக்கிளி) அவர்கள் நேற்று முன்தினம் (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை - சிதம்பரம் ஆகியோரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற மதனராணியின் அன்புக் கணவரும், பரமசிவம், காலஞ்சென்ற சிங்கராஜா மற்றும் அரசமணி ஆகியோரின் ஆருயிர் சகோதரனும், சசீதரன் (பிரான்ஸ்), சதீசன், ஜெனீசன் (பிரான்ஸ்), ரேனுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி, குணமணி, மதனராஜா (பிரான்ஸ்), வனிதா ஆகியோரின் மைத்துனரும், சுகிர்தா (பிரான்ஸ்), முகுந்தினி, காலஞ்சென்ற கார்த்திகா மற்றும் ஜெகதாஸ், கர்சா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாமந்தி (பிரான்ஸ்), சமீனா (லண்டன்), நிலோஜனா, சபிஸ்ரா, சாம்பவி, ஆரணன் (பிரான்ஸ்), பிபாஷன், பபிலாஸ், அபிஸ்னன், சந்தோசனா (பிரான்ஸ்), அரிஸ் (பிரான்ஸ்), மதர்நிஷா (பிரான்ஸ்), ஆருசி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், அரிப்பிரஷாத்தின் (பிரான்ஸ்) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : பிள்ளைகள் - சசீதரன், சதீசன், ஜெனீசன், ரேனுஜா.
ஹரி Hotel ஆனைப்பந்தி


(CS/2657) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீல்ஸ் நிறுவனம் யாழில்!




கீல்ஸ் நிறுவனத்தின் யாழ்ப் பாணக்கிளைத்திறப்புவிழா, மார்ச் மாதம் முதலாம் திகதி மிகப் பிரமாண்டமான வகையில் நடைபெற்றது. அது தொடர்பான ஒளிப்படப் பதிவுகளின் தொகுப்பே இது.













கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாட்டில், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமூக வலுவூட்டல் வேலைத் திட்டம் தொடர்பாக மாவட்ட உத்தியோகத்தர்களுக்குத் தெளிவுபடுத்தும் செயலமர்வு, யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தலைமையில், மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-25,9.66)

## அப்பூதியடிகள் குருபூசை விழா

பளை, மார்ச். 4

இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும், மல்வில் கிருஸ்ணன் அறநெறிப் பாடசாலையும் இணைந்து அப்பூதியடிகள் நாயனார் குருபூசை விழாவை மல்வில் ஆலய ஷரன்யா மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தின. பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் சர்மிளா தம்பிப்பிள்ளை தலைமையில் இடம் பெற்ற விழாவில் பாலமுருகன், மாசார் பிள்ளையார், ராஜகணபதி, பாணாவில் சித்திவிநாயகர், முகமாலை ஞானவைரவர் ஆகிய அறநெறிப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களின் பேச்சு, கதைகூறல், நடனம், பஜனை, வில்லிசை போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பரிசளிப்பும் இடம்பெற்றது. (ச-25,9)



## விமர்சனப் பயில்களம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஆசிரியரும், ஊடகவியலாளருமான கி.செ.துரையின் உலகச் செய்திகள் சஞ்சிகை தொடர்பான விமர்சனம், கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான சஞ்சிகை விமர்சனப் பயில்களமாக கோப்பாய் கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கலாசாலையின் விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர் இலகுநாதன் செந்தூர்ச் செல்வன், ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி நிரோஜன் கௌசிகா, கிறிஸ்தவநெறி ஆசிரிய மாணவி சுதாகர் கமலினி ஆகியோர் சஞ்சிகைக்கான விமர்சன உரைகளை ஆற்றி [illegible] "ஆசிரியரால் முடியுமா?" எனும் தலைப்பில் ஊக்குவிப்பு [illegible] (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலில் தனிவழியில் மான்

**யாழ்ப்பாணம், மார்ச் 4**
**எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழ்மக்கள் கூட்டணி தனித்துப் போட்டியிடத் தீர்மானம் எடுத்துள்ளது என்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழ்க்கட்சிகள் கூட்டாகப் போட்டியிடப் பேச்சுகள் நடைபெற்றுவருகின்றன.
யாழ்ப்பாணத்தில் சந்தித்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், தமக்கிடையில் இரண்டு சுற்றுப் பேச்சு களில் ஈடுபட்ட நிலையில் 9 கட்சிகள் இணைந்து தேர்தலில் கூட்டாகப் போட்டியிடப் போவதாகவும் அறிவித்திருந்தனர்.
இந்த நிலையில், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரகுமாரின் தலைமையில் இயங்கும் கட்சியையும் இந்தப் புதிய கூட்டணியில் உள்ளடக்கியமையால் சில கட்சிகள் அதிருப்தியை வெளியிட்டிருந்தன.
இதையடுத்து, தமிழ்மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் என்பன இந்தப் புதிய கூட்டில் இருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளன.
அதற்கமைய, தமிழ்மக்கள் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் எதிர்வரும் உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் மான் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார். (ச-இ)


# தமிழ் அரசியற்கைதிகளை விடுதலை செய்யுங்கள்!

*ரவிகரன் எம்.பி. வலியுறுத்து*

கொழும்பு,மார்ச்.4
நீண்டகாலமாக விடுதலையின்றிச் சிறைகளில் வாடும் ஆனந்தசுதாகர் உள்ளிட்ட தமிழ் அரசியற்கைதிகளை உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.
நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்ட நீதி மற்றும் தேசிய ஒற்றுமைப்பாடு அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழ் அரசியற்கைதிகள் பலரும் விடுதலையின்றி நீண்டகாலமாகச் சிறையில் வாடுகின்றனர். குறிப்பாக கிளிநொச்சி, மருதநகரைச்சேர்ந்த ஆனந்தசுதாகர் என்பவர் கடந்த 2008 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆனந்தசுதாகர் ஆயுள் தண்டனைக்கைதியாக கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இவரது மனைவி கடந்த 2018 இல் உயிரிழந்தார். இறுதிக்கிரியைக்கு கடும் பாதுகாப்புக்கு மத்தியில் சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்துவரப்பட்டார்.
இறுதிக்கிரியையினை முடித்துக்கொண்டு சிறைச்சாலைப் பேருந்தில் ஆனந்தசுதாகர் ஏறச்சென்ற வேளை அவரது பிள்ளை தந்தையின் கையைப் பிடித்து தானும் சிறைச்சாலைப் பேருந்தில் ஏறிய சம்பவம் அனைவரது மனங்களையும் கலங்கவைத்தது. எனவே நீதி அமைச்சரே சிறையில் அரசியற்கைதிகளாக உள்ளவர்களுக்கு நீதியைத்தாருங்கள் -என்றார். (ச-33)

# எரிபொருள் தட்டுப்பாடென திட்டமிட்டுச் சதி

கொழும்பு, மார்ச்.4
விலைத்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் உரிமையாளர்களால் இந்தப் பிரச்சினை திட்டமிட்டுத் தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.
அத்துடன் நாட்டில் எவ்வித எரிபொருள் தட்டுப்பாடும் இல்லை. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கப்போவதுமில்லை என்றும் தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.
அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியது யார் என்பது சரியாக இனங்காணப்படவில்லை. எரிபொருள் விநியோகம் இடம்பெறவில்லையென சமூக வலைத்தளங்களில் பரவலாகத் தகவல்கள் பகிரப்படுகின்றன.
எரிபொருள் விநியோகச் செயற்பாடுகளைச் சீர்குலைப்பதற்காகவே திட்டமிட்டு இவ்வாறான சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




# ராஜபக்சக்களின் காலத்தில் 34 ஊடகர்கள் படுகொலை

*நடவடிக்கை என்ன? சாணக்கியன் கேள்வி*

கொழும்பு, மார்ச்.4
ராஜபக்சக்களின் ஆட்சியில் 34 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள். இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?
இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
படுகொலை செய்யப்பட்ட ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், தாஜுதீன், பிரகீத் எக்னெலிகொட உள்ளிட்ட பலரின் வழக்கு விசாரணைகள் கடந்தகாலங்களில் மூடிமறைக்கப்பட்டன. இதற்கு அரசியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்தின.
2004 முதல் 2009 ஆம் ஆண்டு முதல் படுகொலை செய்யப்பட்ட 34 தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களின் பெயர்ப்பட்டியலை இலங்கை தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள்.
தற்போது மக்கள் சிறந்த ஆணையை இந்த அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளார்கள். அதனைச் சிறந்த முறையில் பயன்படுத்துங்கள். -என்றார். (ச-இ)



ஊடகவியலாளர் கீத் கடத்தல்;

# முன்னாள் இராணுவத்தினர் இருவர் கைது

கொழும்பு, மார்ச்.4
ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை கல்கிசை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தியபோது பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த 2008 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வைத்தியா வீதிப் பகுதியில் வைத்து ஊடகவியலாளர் கீத் நொயார் வாகனத்தில் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

மத்திய அரசினதும் மாகாணசபைகளினதும்

# திட்டமிடப்படாத செயற்பாடுகளால் பெருமளவு பணம் வீண்விரயம்


*அமைச்சர் சந்திரசேகர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், மார்ச்.4
கடற்றொழில் தொடர்பில் கடந்தகாலங்களில் மத்திய அரசும் மாகாணசபையும் இரண்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியமையால் பெருமளவு பணம் விரயமாகியுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
மாகாண மீன்வள அமைச்சின் செயலாளர்களுக்கும் மத்திய கடற்றொழில் அமைச்சின் பிரதானிகளுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
மத்திய அரசாங்கமும் மாகாணசபையும் இணைந்து செயற்படுவதன் ஊடாக கடற்றொழிலில் பெரும் முன்னேற்றத்தை அடையமுடியும் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.03.2025 செவ்வாய்க்கிழமை

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 04.10.1942 — இறப்பு 07.03.2022

கடந்த 07.03.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர் உயர்திரு.

**விஸ்வநாதர் குருநாதன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் மூன்றாம் ஆண்டு
நினைவு நாளான இன்று (04.03.2025)
அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஓம் நமசிவாய !

இல.692, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

மனைவி
திருமதி கு.அமுதவல்லிஅம்மா
021 222 6711
சிவகுரு ஆதீனம்
077 222 0103

(cs29911) (N-1)

## ஐ.எம்.எப். நிதியைப்பெற வரி இலக்குகள் அவசியம்!

48 மாத நீடிக்கப்பட்ட நிதிவசதியின் கீழ் கடன் நிதித் தவணைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அதன் வரிவசூல் இலக்குகளை அடைவது அவசியம் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தி யுள்ளது.

வரி இலக்குகள் முறையாகச் செயற்படுத்தப்பட்டால், இலங்கை 900 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வரி வருவாய் இலக்கை அடைய முடியும் என்று சர்வதேச நாணயநிதியம் சுட்டிக்காட்டியுள்ளது என திறைசேரியின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படாது என்றும், ஏற்கனவே உள்ள வரிகள் திருத்தப்படாது என்றும் தெரிவித்துள்ள அவர், சர்வதேச நாணய நிதியம் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிக்க அறிவுறுத் தியுள்ளது என்றும் குறிப்பிட் டுள்ளார்.

இந்த வருவாய் திரட்டும் கொள்கைகள் முறையாக செயற்படுத்தப்பட் டால், ஒரு வருடத்துக்குள் மேலும் இரண்டு கடன் நிதித் தவணைகள் பெறப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 4

காலநிலை சீரின்மை காரண மாக ஒத்திவைக்கப்பட்ட யாழ்ப் பாணம் தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரியின் இல்ல மெய் வல்லுநர் போட்டிகளை மீண்டும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

இதன்படி, இடைநிலைப் பிரிவி னருக் கான போட்டிகள் நாளை புதன்கிழமை மதியம் ஒரு மணிக் கும், ஆரம்பப்பிரிவினருக்கான போட்டிகள் நாளைமறுதினம் வியாழக்கிழமையும் நடைபெறு மென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-25)

## நினைவாஞ்சலி

25ம் ஆண்டு — 02ம் ஆண்டு

அளவெட்டி வடக்கு ஓய்வுநிலை ஆசிரியர்களான

அமரர் ந. வாதவூரர் — அமரர் வா. நவமணி

தோற்றம் 10.11.1924



மறைவு 28.12.199

தோற்றம் 10.08.1928



மறைவு 26.02.2023

அப்பா, அம்மா நீங்கள் இருவரும் எமது பாசத்தின் இருப்பிடமாய் இருந்தீர்கள்.
ஆண்டுகள் பல கடந்தாலும் நீங்கள் எங்களுடனேயே வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்

1314 கே.கே.எஸ் வீதி
கொக்குவில்

குடும்பத்தினர்
077 691 5296

## முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம் : 31.12.1937 — மறைவு : 14.02.2024

**அமரர். வேலாயுதக்குருக்கள் இராமலிங்கக்குருக்கள்**

திதி: மாசி மாத வளர்பிறைப் பஞ்சமி

சகம் முழுவதும் போற்றிடவே சங்கரத்தை வாழ் குருவாம்
தகைமைமிகு இராமலிங்கக் குருக்களவர்-இகம் நீத்து
சோபகிருதாண்டினிலே மாசி வளர் பஞ்சமியில்
தாபகமல் தாள் சேர்ந்தார் கான்

ஓராண்டு கழிந்தாலும் ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள் உம்மை காலமெல்லாம்
நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம் தேடி நாம் உருகுகிறோம்
ஆண்டவன் காலடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இளையமகன்-சிவஸ்ரீ இராம சுந்தரலிங்கக் குருக்கள்.
தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயம்,
இலட்சுமணந்தோட்டம் அருள்மிகு வீரமாகாளி அம்மன்
வடபத்திர காளி அம்மன்
பிரதம குருக்களும் பரம்பரை அர்ச்சகரும்

சாத்திரியார் மடம்
முருகன் கோவிலடி,
சங்கரத்தை வட்டுக்கோட்டை

(CS 2669) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 03 . 1944



மறைவு 01 . 03 . 2025

**கனகலிங்கம் நீலாம்பிகை (இலட்சுமி, சின்னம்மா)**

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு, புலவானர் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது 69, சங்கிலியன் வீதி நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் நீலாம்பிகை அவர்கள் (01.03.2025) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கனகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் கலாறஜினி (அதிபர்-மு/பனிக்கன் குளம் ஆரம்பப் பாடசாலை), கருணாநிதி (பிரான்ஸ்), கபிலானந்தன் (கனடா), நிலாகரன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கபிலன், றெபேக்கா, விகிதா, அமுதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் குணபூவதி, காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிற்றம்பலம், நாகபூசணி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாலிங்கம், சண்முகலிங்கம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற மகாதேவன், மற்றும் சற்குணநாதன், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சொரூபராணி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் துரைராஜா, வேணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பிரபன், பிரணவி, கஜனி, யூமேஸ், மார்த்தா, சாஜனா, சாருகாஸ், அஸ்வின், அபிசா, அக்சரன், அஸ்விதா, ஆத்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2025) செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்ச் 17...

இதற்கமைய மேற்படி தினங்களில் மாவட்ட செயலகங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணிவரை வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியும். 20ஆம் திகதியன்று மாத்திரம் நண்பகல் 12 மணிக்குள் தாக்கல் செய்யவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்குரிய கட்டுப்பணம் ஏற்கும் நடவடிக்கை நேற்றுமுதல் ஆரம்பமாகியுள்ளது. 19ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்தமுடியும். எனினும், மார்ச் 8ஆம், 9ஆம், 13ஆம், 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்குரிய திகதி எதிர்வரும் 20ஆம் திகதி அதிகாரபூர்வமாக தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்படும். (ம-44)

## முதலமைச்சர்...

றது. மாகாணசபைத் தேர்தலைத் தற்போது நடத்துவதாக இருந்தால், சில சட்டத்திருங்கள் செய்யவேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனினும், தற்போது மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுமாக இருந்தால் அதில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு நான் தயாரில்லை. கட்சியின் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. தாயை நீதிமன்றத்தில் வைத்துக்கொண்டு தாயிடம் உணவு கேட்பதும், பால் அருந்த நிற்பதும் பொருத்தமற்ற நடவடிக்கைகள். நாங்கள் பதவிகளுக்காக அரசியல் செய்யவில்லை. இனவிடுதலைக்காகவே அரசியல் செய்கின்றோம் என்றார். (ம-113,66,20)

## ஏப்ரல்...

பின்னணியிலேயே, ஏப்ரல் மாத இறுதிக்குள் தேர்தல் நடத்தப்படும் என்று துறைசார் பிரதியமைச்சர் ருவான் செனரத் கூறியுள்ளார்.

ஜூன் 2ஆம் திகதி முதல் உள்ளூராட்சி சபைகள் செயற்பட ஆரம்பிக்கும். தேர்தலை நடத்தி ஒரு மாதகால அவகாசம் தருமாறு எம்மிடம் கோரப்பட்டது. இதற்கமையவே ஜூன் 2ஆம் திகதியை நிர்ணயித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அப்படியாயின் மே மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்தவேண்டும். அந்தவகையில் ஏப்ரல் மாதத்துக்குள் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும்' - என்றார். (ம-44)

## தமிழரசு...

ளானால் அது பற்றி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுவில் பேசி சாதகமான பதிலை தங்களுக்கு அறியத்தரமுடியும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர் களுள் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்துக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகளை மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வருமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தார். இந்தக் கடிதத்துக்கு அனுப்பிய பதில் கடித்தில் தர்மலிங்கம் சித்தார்த்தன் குறிப்பிட்டுள்ளதாவது:

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து செயற்படுவதற்கான உங்கள் விருப்பத்தை தெரியப்படுத்தி நீங்கள் அனுப்பி வைத்த கடிதம் கிடைக்கப்பெற்றேன். இன நலன் குறித்து எங்கள் மத்தியில் கட்டியெழுப்பப்படவேண்டிய ஒற்றுமைபற்றி கடிதத்தில் நீங்கள் தெரிவித்துள்ள விடயங்களில் எந்தக் காலத்திலும் நாங்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பவர்கள் அல்லர்.

உள்ளூராட்சித் தேர்தலில் சில இடங்களிலாவது ஒன்றாகப் போட்டியிடுவது பற்றி ஆராய விரும்பும் நீங்கள், தற்போது நாம் அமைத்துள்ள கூட்டணி உங்களுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளிப்பதாகவும், உங்கள் கட்சிக்கு தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு தேர்தல்களைச் சந்திக்கும் நிலை கடந்த 2023ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்தே ஏற்பட்டது. தனித்துப் போட்டியிட்டு பின்னர் இணைந்து ஆட்சி அமைக்கும் எண்ணக்கருவை, தங்களது மத்திய குழு மட்டக்களப்பில் கூடி எடுத்தீர்கள் இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு தமிழரசுக் கட்சி வெளியேறியது. பிரிந்து நின்று செயற்படுவதால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை ஆணித்தரமாக நாம் முன்வைத்தபோதும் தமிழரசுக் கட்சியின் செயல் தலைவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மறைந்த சம்பந்தன் அண்ணரிடம் எமது நிலைப்பாட்டை நாம் நேரடியாக முன்வைத்த போதும்கூட அவரும் தமிழரசுக் கட்சியின் முடிவினை ஏற்றுச் செயற்படுமாறு எம்மை அறிவுறுத்தினார்.

அன்று கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர் நாமும் ரெலோ அமைப்பும் இயன்றவரையிலும் ஏனைய தமிழ் அமைப்புகளை ஐக்கியப்படுத்தி கூட்டமைப்பாக செயற்படும் நோக்கில் மேலும் மூன்று அரசியல் கட்சிகளை இணைத்துப் பயணிக்கத் தொடங்கினோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அதன் அங்கத்துவக் கட்சிகளினதும் தொடர்ச்சியான பிளவுகளால் ஏற்பட்ட மோசமான விளைவுகளை கடந்த நாடளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களும் ஆழமாக உணர்ந்து கொண்டோம்.

மேலும் கடந்த நாடளுமன்றத் தேர்தலில் ஐந்து கட்சிகளாக இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகப் போட்டியிட்ட நாம், நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கு மிகவும் அவசியமான ஒற்றுமை எனும் விடயத்தை மேலும் வலுவானதாக்க சாத்தியமான வகையில் மேலும் சில அமைப்புகளை இணைத்துப் பயணிக்கத் தீர்மானித்து தொடர்ச்சியாக மேற்கொண்ட செயற்பாடுகளின் பயனாகவே இன்று பல கட்சிகள் இணைந்த கூட்டணியொன்றை உருவாக்கமுடிந்துள்ளது. நீங்கள் விரும்புவதுபோல தமிழரசுக் கட்சியுடன் இந்தக்கூட்டணியும் இணைந்து செயற்படுவதன் மூலம் தமிழ்த் தேசியத்துக்கு மேலும் வலுச்சேர்க்கவேண்டும் என்பதில் நாமும் பெருவிருப்பம் கொண்டுள்ளோம்.

எனவே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக நடைமுறைச் சாத்தியமான வகையில் எமது கூட்டணியுடன் பேச்சுக்களை நடத்தக்கூடிய தீர்மானம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேற்கொண்டு அறியத்தருவீர்களானால் அது பற்றி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுவில் பேசி சாதகமான பதிலை தங்களுக்கு அறியத்தரமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்-என்றுள்ளது. (ம-125,66,27,26)

## காங்கேசன்...

பயணிகள் படகே இவ்வாறு மீண்டும் கரைக்குத் திருப்பி விடப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு இயக்கப்பட்டு வந்த பயணிகள் படகு வானிலை மாற்றம், சர்வதேச தொழில்நுட்ப அனுமதி உள்ளிட்ட காரணங்களால் கடந்த வருடம் நவம்பர் மாதம் 18ஆம் திகதிமுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து கடந்த மாதம் 22ஆம் திகதிமுதல் மீண்டும் பயணிகள் படகுச்சேவை ஆரம்பமானது. எனினும், வானிலை அச்சுறுத்தல்களால், மீண்டும் கப்பற்சேவை இரத்துச் செய்யப்பட்டு, வானிலை மாற்றம் சீரடைந்ததும் மீண்டும் மார்ச் மாதம் முதலாம் திகதிமுதல் இந்தக் கப்பற்சேவை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு மார்ச் மாதம் முதலாம் திகதி கப்பல் புறப்பட்டபோதே கடல்சீற்றம் அதிகமாக இருந்ததைத் தொடர்ந்து படகு மீண்டும் நாகப்பட்டினத்துக்குத் திருப்பி விடப்பட்டுள்ளது.

சுமார் 15 கடல்மைல்கள் பயணித்த பின்னரே படகு மீண்டும் திரும்பிச் சென்றதாக தொடர்புடைய நிறுவனம் அறிவித்துள்ளது. (ம-125)

## படையினர்...

செயற்பட்டுவருகின்றார் என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் வீரவன்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையிலுள்ள இராணுவத்தை நாட்டுக்கு சார்பான தொழில்முறை இராணுவமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். அதாவது அரசுக்குச் சார்பற்ற, தொழில்முறையற்ற இராணுவமே தற்போது உள்ளது என்ற கருத்தையே இதன்மூலம் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார். போரின்போது தொழில்முறை இராணுவ அறத்துக்குப் பொருத்தமற்ற விதத்தில் இராணுவம் போர்க்குற்றம் இழைத்தது என மனித உரிமைகள் பேரவையாலும், புலம்பெயரிகளாலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அந்தத் தவறான கருத்துக்களை உண்மையாக்குவதற்கே மேற்படி தரப்புகள் முயற்சித்து வருகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இராணுவம் அரசுக்குச் சார்பற்றது, தொழில்முறையற்றது என்ற கருத்தை பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி வெளியிட்டுள்ளார். தொழில்முறையற்ற இராணுவத்தால் போரை முடித்திருக்க முடியுமா? தொழில்முறையற்ற இராணுவம் எனக் கூறப்படுவதன் அர்த்தம், போர்க்குற்றங்களில் ஈடுபடக்கூடிய இராணுவம் என்பதாகும். பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் இந்தக் கருத்து, பாதுகாப்புப் படையினர் மீதான பெரும் தாக்குதலே - என்றார். (ம-44)

## உழவியந்திரத்தில்...

ளான் என்பதை அறியாமல், அவனின் தந்தை உழவியந்திரத்தைப் பின்னோக்கி இயக்கியுள்ளார். இதன்போதே அந்தச் சிறுவன் உழவியந்திரத்துக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளான்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், இறப்பு விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125,26,27)

## உணவகத்தின்...

நிலையிலேயே, அவர்களில் ஒருவர் உணவகத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விரைந்து செயற்பட்டு, சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ,ம-110,18)

## 4,255....

பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை அறிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து 4 ஆயிரத்து 255 கடலட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், மணியத்தோட்டம், உதயபுரம், குருநகர் மற்றும் அரியாலை ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என்றும், 21 முதல் 56 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் கடற்படையினர் மேலும் அறிக்கையிட்டுள்ளனர். (ம-125)

## ஜனவரியில்...

கொழும்பு, மார்ச் 4

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் மட்டும் சுற்றுலாப்பயணிகளால் 400.7 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் இது 17.2 சதவீத அதிகரிப்பு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு ஆளுநரின் பங்கேற்புடன்

# நெடுந்தீவில் நாளை நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 4

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனின் பங்கேற்புடன் நடமாடும் சேவை நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 5 அமைச்சுக்களின் செயலாளர்கள், அமைச்சுக்களின் கீழான அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்களும், அதற்கு மேலதிகமாக மத்திய அரசின் கீழான இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்தொழில் நீரியல்வளங்கள் திணைக்களம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், தேசியநீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் பிராந்தியத் திணைக்களத் தலைவர்களும் இந்த நடமாடும் சேவையில் பங்கேற்கவுள்ளனர்.

குறிப்பிட்ட ஐந்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாகச் சேவைகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பொதுமக்கள் இந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அழைப்பு விடுத்துள்ளார். (ம-66)

# பாதாளக்குழுவின் செயற்பாட்டை ஆரம்பித்துவைத்தது ஜே.வி.பி.யே

## பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

**கொழும்பு,மார்ச் 4**

**பாதாளக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு கடந்தகால அரசாங்கங்களை தேசிய மக்கள் சக்தியினர் குற்றஞ்சாட்டுவதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை ஜே.வி.பி.யே ஆரம்பித்து வைத்தது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோத ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்யவேண்டுமாயின் அதனை ஜே.வி.பி.யின் பத்தரமுல்லைக் காரியாலயத்தில் இருந்துதான் ஆரம்பிக்கவேண்டும். 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச படைகளிமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை மக்கள் விடுதலை முன்னணி பாதுகாப்பு அமைச்சுக்கு முழுமையாக ஒப்படைக்கவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்களில் பெரும்பாலானவற்றை பாதுகாப்பு அமைச்சு கைப்பற்றியது.

மிகுதி ஆயுதங்கள் அழிக்கப்பட்டன- என்றார். (அ-33)



எறிபத்த நாயனார் குரு பூஜை நிகழ்வு, புங்குடுதீவு கொம்மாபிட்டி பிள்ளையார் கோவில் அறநெறிப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலகத்தினால் இந்த நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டது. (அ-25,9)



கொழும்பில் இருந்து மோ.சைக்கிளில்

# நிர்வாணமாகச் சென்ற இளைஞரை படாதபாடுபட்டுப் பிடித்த பொலிஸ்!

கொழும்பு, மார்ச் 4

கொழும்பிலிருந்து கண்டிக்கு நிர்வாணமாக மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் கடுகன்னாவப் பொலிஸாரால் பெரும் முயற்சியின் பின்னர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டி-கொழும்பு வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற 23 வயதுடைய இளைஞரை அவதானித்த பல பொலிஸ் அதிகாரிகள், அவரைப் பிடிக்க முயன்றனர்.

ஆனால் அவர்களிடம் இருந்து தப்பி தனது பயணத்தைத் தொடர்ந்துள்ளார் இளைஞர். கேகாலை மற்றும் மாவனெல்லை பொலிஸாரும் விடாது அந்த இளைஞரைத் துரத்திச்சென்றுள்ளனர். கடைசியில் கடுகன்னாவ மற்றும் பேராதனை பொலிஸாருக்கு தகவல் தெரிவித்து, அங்கு வீதித்தடைகளை ஏற்படுத்தியே அந்த இளைஞரைப் பிடிக்கமுடிந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞர் அஹங்கம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இளைஞனின் மனநல மதிப்பீட்டைப்பெற நீதிமன்ற அனுமதி பெறப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-இ)

# யானைகளைக் காப்பாற்ற ரயிலின் நேரம் மாற்றம்!

கொழும்பு, மார்ச் 4

கொழும்புக் கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணிக்கும் மீனகயா ரயிலின் நேரம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் மாற்றப்படவுள்ளது. வழக்கமாக இரவு 7 மணிக்குப் பயணத்தை ஆரம்பிக்கும் மீனகயா ரயில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இரவு 11 மணிக்குப் பயணத்தை ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயிலில் அடிக்கடி யானைகள் மோதி உயிரிழப்பதைத் கருத்திற்கொண்டு இந்த நேர மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# நல்ல நிலையில் காற்றின் தரம்!

கொழும்பு, மார்ச் 4

நாட்டின் பெரும்பாலான நகரங்களில் காற்றின் தரம் நல்ல நிலையில் காணப்படும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளது. எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு நாட்டின் பெரும்பாலான நகரங்களில் நல்ல நிலையிலும், யாழ்ப்பாணம், காலி, புத்தளம் மற்றும் பதுளை ஆகிய பகுதிகளில் மிதமான நிலையிலும் காற்றின் தரம் இருக்கும் என்றும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ-இ)

# புதிய கல்விச் சீர்த்திருத்தங்களில் தரம் 1, 6 பாடத்திட்டங்கள் மாறும்

## தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

புதிய கல்விச் சீர்திருத்தங் களின் கீழ், தரம் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கான பாடத்திட்டங்கள் முழுமையாக மாற்றப்படும் என்று தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் மஞ்சுள விதானபத்திரன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

10ஆம் தரத்துக்கான பாடத்திட்டம் ஓரளவு மாற்றப்படும். புதிய சீர்திருத்தங்களின் கீழ் ஏனைய தரங்களில் குறிப் பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இருக்காது. இந்த மூன்று தரங்களுக்கான புதிய கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறை 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து வகுப்பறைகளில் செயற்படுத்தப்படும். ஆவணங்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல், ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல், தொகுதிகளைத் தயாரித்தல் மற்றும் புத்தகங்களைத் தயாரித்தல் உள்ளிட்ட சீர்திருத்தச் செயல்முறை வேகமாக

முன்னேறிவருகின்றது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு தேசிய கல்வி நிறுவனத்தின் அதிகாரிகள் மிகுந்த அர்ப்பணிப்பை வழங்கியுள்ளனர்-என்றார். (அ-எ-இ)

**வெல்டிங் வேலையாட்கள் தேவை**

ஆறுகால்மடம் யாழ்ப்பாணத்தில் உள்ள சிற்றி பாம் இற்கு வெல்டிங் வேலையாட்கள் தேவை.

075 944 4601

(CS/37452) J-1

**பெண் சமையலாளர் தேவை**

குடும்பம் ஒன்றிற்கு மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்திலிருந்து 1Km க்குள் வதியும் பெண் சமையலாளர் தேவை.

075 944 4601

(CS/57429) J-1

**விற்பனைக்கு**

TV - (Sony Google TV 43" 2024) - 204,000/-

Washing Machine (Haier 9Kg 2024) - 195,000/-

புத்தம் புதியது. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

077 138 0180

(CS/2655) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.